# ஊற்று



## தலைவர் உரை :

இந்த இதழின் அட்டையை அலங்கரிக்கும் மேதகு முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் கடந்த 27-7-2015 அன்று நம்மை விட்டுப் பிரிந்த செய்தி இரவு 8.00 மணி அளவில் பரவி, இந்தியா மட்டும் அல்ல, உலகம் முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. அவரைப் பற்றி அறிந்த ஒவ்வொருவரும் தங்கள் குடும்பத்தில் ஒருவரை இழந்து விட்ட உணர்வோடு வருந்தினார்கள். எந்த ஒரு அரசியல் கட்சியைச் சார்ந்தவராக இல்லாமல் இருந்தாலும், மிக மிகச் சாதாரண ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவராக இருந்தாலும் தன்னுடைய மிகக் கடுமையான உழைப்பால் படித்து விண்வெளித்துறையில் பல ஆண்டுகாலம் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றி இந்தியாவின் அணுகுண்டு சோதனையை உலகமே அறிந்து வியக்கும் வகையில் வெற்றிகரமாக நடத்துவதற்கும், அக்னி ஏவுகணையை வடிவமைப்பதற்கும் பெரும் பங்காற்றியவர் டாக்டர் அப்துல்கலாம். இந்தியாவின் பிரதமரின் அறிவியல்ஆலோசகராகப் பணியாற்றியவர். அவர் இந்தியக் குடியரசுத் தலைவராகப் பொறுப்பு ஏற்பதற்கு முன்பே, ‘பாரத ரத்னா’ வரையில் உச்ச விருதுகளையும், உலகின் பல்வேறு பல்கலைக்கழகங்களில் டாக்டர் பட்டங்களும் பெற்றவர்.

மேதகு டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் குடியரசுத் தலைவராக இருந்த ஐந்து ஆண்டுகளில் நாட்டின் மிக உயரிய பொறுப்பில் இருந்தாலும் மக்களோடு எவ்வாறு நெருக்கமாக இருக்க வேண்டும், நாட்டின் நிலையான வளர்ச்சிக்கும் பலதுறைகளிலும் நாடு முன்னேற்றம் அடைந்து வல்லரசாக மாறுவதற்கு உரிய வழிகள் என்ன? என்பதை மிக ஆழமாகச் சிந்தித்து, அதற்கான செயல் திட்டங்களை உருவாக்கி அளித்தவர் டாக்டர் அப்துல் கலாம். ஒரு முன்மாதிரி குடியரசுத் தலைவராக, உண்மையான மக்கள் குடியரசுத் தலைவராக விளங்கியவர் டாக்டர் அப்துல் கலாம் அவர்கள். அவர் இறந்தது முதல் இன்றுவரை அவர் மக்களுக்காக, மாணவர்களுக்காக, இளைஞர்களுக்காகச் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் எண்ணிப் பலதுறை மக்களும் அவரது இழப்பை எண்ணி வருந்திக் கொண்டிருக்கிறார்கள்.

டாக்டர் அப்துல் கலாம் அவர்கள், தமிழின் மீது மிகவும் பற்று கொண்டிருந்தவர். இறுதிவரை தமிழ்தெரிந்த தமிழர்களிடம் தமிழிலேயே உரையாடி மகிழ்ந்தவர். திருக்குறளை ஆழமாகப் படித்து அதனை உள் வாங்கிக்கொண்டு பல கட்டங்களில் மிகப் பொருத்தமாக வெளிப்படுத்தியவர். குடியரசு மாளிகையில் திருவள்ளுவர் சிலையை நிறுவி தமிழர்களைப் பெருமைப் படுத்தியவர். உலக நாடுகளிலும் ஐரோப்பிய பாராளுமன்றத்திலும் உயைாற்றிய போது சங்க இலக்கியங்களையும், திருக்குறளையும் மேற்கோள் காட்டிப் பேசி 3000 ஆண்டுகளுக்கு முன்பே இந்த உலகத்து மாந்தர்கள் அனைவரையும் பற்றிச் சிந்தித்து, உயரிய நல்வாழ்வு வாழப் பின்பற்ற வேண்டிய வாழ்க்கை முறை தமிழில் உள்ளது என்பதை விளக்கி வெளிநாட்டினரை வியக்கவைத்து அவர்களால் பாராட்டப்பட்டவர்.

டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் பல்வேறு கட்டங்களில் கூறிய பொன்மொழிகள் திருக்குறளைப் போன்று சுருக்கமாகவும், ஆழமாகவும் அருமையான பொருள் பொதிந்ததாகவும் இருந்தன. அவரின் மிகச் சிறந்த சில பொன்மொழிகள் :

“நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம். ஆனால், இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்” - நூறு விழுக்காடு அவ்வாறே அவர் வாழ்ந்து மறைந்தார்.

இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் அவர் கூறியது “கனவு காணுங்கள், ஆனால் கனவு என்பது நீ தூக்கத்தில் காண்பது அல்ல. உன்னைத் தூங்கவிடாமல் பண்ணுவது எதுவோ அதுவே இலட்சியக்கனவு ” இதனை முழுவதுமாகப் பின்பற்றுவர் அனைவரும் தங்கள் இலட்சியத்தை உறுதியாக அடைவார்கள்.

மேலும் அவர் கூறியதாவது : “ஒரு முட்டாள் தன்னை முட்டாள் என உணரும் தருணத்தில் புத்தியாலியாகிறான்”

“ஒரு புத்திசாலி தன்னைப் புத்திசாலி என்று பெருமை கொள்ளும் தருணத்தில் முட்டாளாகிறான்”

“சிந்திக்கத் தெரிந்தவனுக்கு ஆலோசனை தேவை இல்லை, துன்பங்கள் சந்திக்கத் தெரிந்தவனுக்கு வாழ்க்கையில் தோல்வி இல்லை.”

“நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும் எப்போதும் மண்டியிடுவது இல்லை.”

“சிக்கல்களை எதிர்கொள்ளும்போது கூடவே பல திறமைகளும் வெளிப்படுகின்றன”

“பயந்தால் வரலாறு படைக்க முடியாது” ஒவ்வொரு வார்த்தையும் எவ்வளவு ஆழமான உண்மையான பொருள் பொதிந்த வார்த்தை. இதனைப் புரிந்து கொள்ளும் ஒவ்வொருவரும் சாதனையாளர்கள் ஆவர்.

பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்தில் 28-7-2015 அன்று காலை அவர் படத்தை வைத்து மாலையிட்டு சங்கப் பொறுப்பாளர்கள் அனைவரும் அஞ்சலி செய்தோம்.

அவரது உடல் நல்லடக்கம் செய்த 30-7-2015 அன்று நமது காமராசர் உயர்நிலைப்பள்ளியில் பொறுப்பாளர்கள் அனைத்து மாணவர்களோடும் இணைந்து டாக்டர் அப்துல் கலாம் அவர்களின் படத்தின் முன் மலர்கள் தூவி மெழுகுவர்த்தி ஏற்றிக் கண்ணீர் அஞ்சலி செய்தனர்.

அண்மைக் காலத்தில் மறைந்த தலைவர்களில் மிக உயர்ந்த, சிறப்பான இடத்தை அனைத்து மக்கள் இதயங்களிலும் பெற்றவர் டாக்டர் கலாம். இந்தியாவின் பல மாநிலங்களில், தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, பீகார், மேற்கு வங்காளம் என்று பல மாநில முதல்வர்கள் தங்கள் மாநிலத்தில் அவர் பெயரில் பலவிருதுகளும், அறிவியல் கூடங்களுக்கு அவர் பெயரும் வைத்துள்ளனர். கர்நாடகத்தில் பெங்களூர் மற்றும் மாநிலத்தில் பல இடங்களில் கன்னடர்கள் அவர் படத்தை அலங்கரித்து வைத்து தங்கள் இதயபூர்வ அஞ்சலியைத் தெரிவிப்பதாகக் கூறியிருப்பது, டாக்டர் அப்துல் கலாம் அவர்கள், சாதி, மதம், மொழி, மாநிலம் இவை அனைத்தையும் கடந்த மிகச்சிறந்த மாந்த நெறியாளர் என்பதை அனைவரும் ஏற்றுக்கொண்டதையே காட்டுகிறது. அவரது நினைவும், புகழும் என்றென்றும் நிலைத்திருக்கும். அவரது வாழ்க்கையை இன்றைய அரசியல் தலைவர்களும், அரசு அதிகாரிகளும் எடுத்துக்காட்டாக எடுத்துக்கொண்டு பணியாற்றினால் இந்தியா உயரும், மக்கள் அவர்களைப் போற்றுவார்கள். செய்வார்களா ?

ஹாங்காங் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் திரு. திருப்பதி நாச்சியப்பன் அவர்களைச் சங்க முன்னாள் செயற்குழு உறுப்பினர் சுந்தரேசன் அவர்கள் அழைத்து வந்தார். செயற்குழுவினர் அனைவரும் அவரைப் பாராட்டி பல்வேறு கருத்துகளை அவரோடு பகிர்ந்து கொண்டோம்.

சங்கப் பள்ளியில் பெருந்தலைவர் காமராசர் பிறந்தநாள் விழாவும், மாணவர்களுக்கு இலவயமாக அனைத்துப் பொருட்கள் வழங்குகிற நிகழ்வும் மிகவும் சிறப்பாக நடந்தேறியது.

நமது சங்கத்தின் சிறப்புப் பொதுக்குழுக் கூட்ட அறிவிப்பும் ஆண்டு பொதுக்குழு கூட்ட அறிவிப்பும் இந்த இதழில் அறிக்கையாக வெளியிடப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு சங்க வளர்ச்சிக்குரிய கருத்துகளையும் பங்களிப்பையும் செய்ய வேண்டுகிறேன்.

**கோ. தாமோதரன்,** தலைவர்